# பாரம்பரிய மரச் சிற்பப் படைப்புக்களின் அழகியல்: யாழ்ப்பாணத்தின் திருநெல்வேலிப் பிரதேசத்தை மையமாகக்கொண்ட ஆய்வு

**சர்மிளா சூரியகுமார்**
*Visual Artist*

**ஆய்வுச் சுருக்கம்.**

*கலை வெளிப்பாடுகள் அவை உருவாக்கப்படும் சூழலுக்கு ஏற்ப அக்காலத்து சமூகப் பண்புகளையும், மக்களின் வாழ்வியலையும் வெளிப்படுத்தக்கூடியவையாகக் காணப்படுகின்றன. எத்தகைய கலைப்படைப்பும் மக்களின் உளநிலையிலிருந்தே தோற்றம் பெறும். அந்த உளநிலையானது சமூகத்தின் இருப்பிலிருந்து மேலெழுகின்றது எனும் மார்க்சிச உளவியலாளர்களின் கருத்தின்படி, ஒரு சமூகத்தின் பண்பாடு சார்ந்த வெளிப்பாட்டுத்தன்மையில் அக்கால சிற்பங்கள் முக்கியம் பெறுகின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத்து மரச்சிற்பங்களின் கலைவெளிப்பாடுகள் அச்சமூகத்தின் பண்பாட்டு ரீதியான வெளிப்பாட்டு மூலகம் ஆகும். யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலிப் பிரதேசத்தில் மரத்தினை ஊடகமாகக்கொண்டு கம்மாளர் அல்லது விஸ்வகுலம் எனும் மக்கள் தொகுதியினரால் குருசீட மற்றும் பரம்பரை முறைவழியாக தமக்கான சடங்குகள், சமய நெறிமுறைகளைப் பின்பற்றி மரச்செதுக்கல் சிற்ப வேலைபாடுகளை உருவாக்கிவருகின்றனர். சிற்பசாஸ்திர அளவுகள் மூலம் கலைப் படைப்புக்களை உருவாக்குதல் என்பது இவர்களது கலைப்படைப்பின் அடிப்படை அம்சமாகும். இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலும் நவீன சமூகமயமாக்கலின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மரபுசார்ந்த வெளிப்பாடுகளின் அழகியல் நுணுக்கங்களை எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதிலுள்ள இருப்புநிலை என்பது இன்றையகாலகட்டத்தில் கேள்விக்குரியதாகி உள்ளது. ஆக்கமற்ற ரீதியிலான அபிவிருத்திச் செயற்பாடுகள், முறையற்ற பாதுகாப்பு முறைகள், பொருளாதார முன்னேற்றம், நவீன மயமாக்கல், மக்களின் கலைவெளிப்பாடுகள் மீதான அசட்டுத்தனமான மனநிலை மற்றும் அண்மைக்காலமாக நடைபெற்ற உள்நாட்டுப் போர் போன்ற செயற்பாடுகளினால் சமூகப் பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த பல படைப்புக்கள் அழிவடைந்துவிட்டன. இவற்றில் சிற்பங்களும் முக்கியம்பெறுகின்றன. யாழ்ப்பாணத்துச் சிற்பங்களில் மரச்சிற்ப வேலைப்பாடுகள் முக்கியமானவை. அண்மைக்காலத்தில் புதிய சிற்ப ஊடகங்களின் பாவனையும், நவீன கண்டுபிடிப்புகளும், புதிய இயந்திரங்களின் வருகையின் தாக்கங்களும் இப் பாரம்பரிய சிற்ப வேலைபாடுகளில் ஊடுருவுகின்றன. இதனால் பாரம்பரிய மரச்செதுக்கல் வேலைப்பாடுகளின் அழகியல்தன்மை மழுங்கடிக்கப்பட்டுள்ளது என்பதே ஆய்வுப்பிரச்சனையாகக் கொள்ளப்படுகிறது. திருநெல்வேலிப் பிரதேச பாரம்பரிய மரச்செதுக்கல் வேலைப்பாடுகளின் அழகியல் மற்றும் நுணுக்கங்களைக் கண்டறிதலும், நவீன இயந்திரங்களின் மூலமாக உருவாக்கப்படும் சிற்பங்களுக்கும் - பாரம்பரிய சிற்பக்கலைப் படைப்புகளுக்கும் இடையிலான அழகியல் ரீதியான வேறுபாடுகளைத் தொகுத்தலும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். யாழ்ப்பாணத்து மரச்சிற்ப அழகியலில் நவீன இயந்திரங்கள் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன எனும் ஆய்வினுடைய கருதுகோளினடிப்படையில் 2000ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியைக் கால*

*எல்லைகளாகக்கொண்ட இவ்வாய்வானது கள ஆய்வு மற்றும் பண்புசார்ந்த ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருநெல்வேலிப் பிரதேசத்தின் சிற்பக்கூடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கலைப்படைப்புக்களை மாதிரிகளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில், மரச்சிற்பக் கலைஞர்களின் வாய்மொழிக் கருத்துக்கள், நேர்காணல்கள் முதல்நிலைத் தரவுகளாகவும் இலக்கிய மீளாய்வுகள், நூல்கள், மலர்வெளியீடுகள் என்பன இரண்டாம்நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நவீன இயந்திரங்களின் பாவனை காரணமாக திருநெல்வேலிப் பிரதேசத்தின் மரச்செதுக்கற் கலையில் அழகியல் சார்ந்த நுணுக்கங்களில் தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், நவீன இயந்திரப் பாவனையின் பெறுபேறுகளானவை பாரம்பரிய வடிவிலான பெறுபேறுகளின் அழகியல் தன்மைகளை முழுமையாக பிரதிபலிக்கவில்லை என்பதுடன் பாரம்பரிய சிற்பங்களின் அழகியல் தன்மையும் இயந்திரங்களின் வெளிப்பாட்டுச் சிற்பங்கள் மூலமாக இழக்கப்பட்டுவருகின்றது என்பதும் ஆய்வின் பெறுபேறுகளாகப் பெற்றுக்கொள்ளப்பட்டன. சிற்பக் கலைஞர்களுக்கும், மரச்சிற்பம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கும் மரச்சிற்பம் தொடர்பான பண்பாட்டுப் பெறுமானத்தை எடுத்துக்காட்டுவதாகவும், முறைசார்ந்து இயங்கும் ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் துணைபுரிவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது. பண்புசார் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது இதன் தொடர்ச்சியாக எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்படலாம் என்பதுடன், ஆய்வின் பரப்பின் அடிப்படையிலான மாற்றங்களை விஸ்தரித்தும் மேற்கொள்ளப்படலாம் என்பது எதிர்கால ஆய்விற்கான பரிந்துரைகளாகக் குறிப்பிடப்படுகின்றன.*

***திறவுச்சொற்கள் -*** *மரச்செதுக்கல், சிற்பக்கலை, பாரம்பரியம், யாழ்ப்பாணம், திருநெல்வேலி*